LANKA Sathosa
ලංකා සතොස லங்கா சதொச

# வெற்றிடங்கள்

Ministry of Trade, Commerce, Food Security and Cooperative Development

நாடெங்கும் உள்ள சமூகங்களுக்கான தினசரி வாழ்வை சிறந்ததாக்குவது. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SMEs) தங்களது வணிகங்களை வளர்த்துக் கொள்ள நம்பகமான மற்றும் சிக்கலற்ற தளத்தை வழங்குவதன் மூலம் அவற்றை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அதேவேளையில், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இடையில் குறைந்தபட்ச தடைகளுடன் வலுவான மற்றும் நேரடி தொடர்புகளை உருவாக்குகிறோம். நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை வழிகாட்டும் கொள்கைகளாகக் கொண்டு, எங்கள் பணியாளர்களும் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்று வெற்றி அடையக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஆதரவான பண்பாட்டை நாம் உருவாக்கி வளர்க்கிறோம்.

இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு சேவை செய்வது, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை (SMEs) ஆதரிப்பது மற்றும் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது என்ற எங்கள் நோக்கத்தில் பங்களிக்க, மேற்கூறிய பதவியில் இணைந்து லங்கா சதொச லிமிடெட் குடும்பத்தின் ஓர் அங்கமாக வர திறமையான நபர்களை நாங்கள் தேடுகிறோம்.

## 1. பிராந்திய முகாமையாளர் (நாடு முழுவதும்)

**பணிப் பெறுப்பு**

- ஒதுக்கப்பட்ட பிராந்தியத்தில் விற்பனை வளர்ச்சியை முன்னெடுத்து, செயல்திறன் இலக்குகளை அமைத்து, விற்பனை நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணித்து, வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கும் பயனுள்ள மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துதல்.
- நிறுவனத்தின் மூலோபாயம், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டிற்கு ஏற்ப புதிய கிளைகள் திறத்தல், மூடல், இடமாற்றம் மற்றும் விரிவாக்கத் திட்டங்களை மேற்பார்வை செய்து, விற்பனை நிலையங்களின் வலையமைப்பு மேம்பாட்டை நிர்வகித்தல்.
- கிளை முகாமையாளர்கள் மற்றும் கிளை குழுக்களை வழிநடத்தி, பயிற்சி அளித்து, திறனை மேம்படுத்தி, உயர் செயல்திறன் கலாசாரம், சிறந்த சேவை மற்றும் தொடர்ச்சியான தொழில்முறை முன்னேற்றத்தை ஊக்குவித்தல்.
- அனைத்து கிளைகளிலும் உயர்தர வாடிக்கையாளர் சேவை தரநிலைகள் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்து, வாடிக்கையாளர் குறைகளை முன்கூட்டியே கவனித்து, அவற்றை உடனடியாகவும் தொழில்முறை ரீதியிலும் தீர்த்தல்.
- வரவு செலவுத் திட்டப் பயன்பாட்டை கண்காணித்து, செயல்பாட்டு செலவுகளை கட்டுப்படுத்தி, வளங்களை சிறப்பாக பயன்படுத்தி, விரயத்தைக் குறைத்து மற்றும் கூடுதல் வேலை நேரச் செலவுகளை சுருக்கி நிதி இலக்குகளை அடைய நிதி முகாமைத்துவத்தை திறம்பட மேற்கொள்ளுதல்.
- சந்தை போக்குகள், போட்டியாளர் நடவடிக்கைகள் மற்றும் வாடிக்கையாளர் நடத்தை பற்றிய வழக்கமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டு, வணிக உத்திகளை மேம்படுத்தி, கிளை செயல்திறனை வலுப்படுத்தி மற்றும் சந்தைப் பங்கை விரிவுபடுத்த உதவுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்: கீழுள்ள 1 அல்லது 2**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம்/ வர்த்தக முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ பொருளியல் அல்லது வர்த்தகத் துறையில் இளமாணி பட்டம்.
2. பதவிக்குத் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை சான்றிதழ் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள I அல்லது II அல்லது III)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
II. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் MA-4/ MA-3 பிரிவு பதவி ஒன்றில் 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
III. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் MA 1-2 தரம் II பிரிவு பதவி ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு** : (சம்பள குறியீடு JM 1-1-2025 மற்றும் சம்பள அளவு ரூபா (72, 650/= - 10 x ரூபா 1, 360/= - 18 x ரூபா 2, 040/= - ரூபா 122, 970/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026** : அடிப்படைச் சம்பளம்: 65,633.00, வாழ்க்கைச் செலவு: 17,800.00, பயண கொடுப்பனவு: அதிகபட்சம் 50,000.00 (மீள பெறத்தக்க அடிப்படை), பிராந்திய முகாமையாளர் கொடுப்பனவு: 5000.00

**நியமனத்தின் தன்மை** : EPF மற்றும் ETF இற்கான உரித்துடன் நிரந்தர அடிப்படை.

## 2. கடைப்பொறுப்பாளர் (நாடு முழுவதும்)

**பணிப் பொறுப்பு**

- விற்பனை இலக்குகள், இலாப நோக்கங்கள், செயல்பாட்டு சிறப்புத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றை அடைவதை உறுதி செய்து, கடையின் மொத்த பொறுப்பையும் ஏற்றல்.
- கடையின் நியமிக்கப்பட்ட சரக்கு பொறுப்பாளராக செயல்பட்டு, சரக்கு துல்லியம், சிறந்த இருப்பு அளவுகள், சரியான சேமிப்பு நடைமுறைகள், FIFO முறையின் செயல்படுத்தல் மற்றும் சரக்கு இழப்புகளை குறைப்பதை உறுதி செய்தல்.
- சுத்தமான, ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் வாடிக்கையாளர் நட்பு சூழலை உறுதி செய்வதுடன், தினசரி கடை நடவடிக்கைகள் மற்றும் சேவைத் தரநிலைகள் சீராக நடைபெறுவதை பராமரித்தல்.
- நிறுவன கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணக்கமாக செயல்பட்டு, நிறுவன சொத்துக்களை பாதுகாத்து, பண பரிவர்த்தனைகளை நிர்வகித்து, சரியான மற்றும் நேர்த்தியான அறிக்கைகளை உறுதி செய்தல்.
- ஊழியர்களை மேற்பார்வை செய்து, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு வழங்கி, ஒழுக்கம் மற்றும் உற்பத்தித்திறனை உறுதி செய்து, செயல்திறனை மதிப்பீடு செய்து, உயர்தர செயல்திறன் கொண்ட குழு கலாசாரத்தை உருவாக்குதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்: கீழுள்ள 1 அல்லது 2**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வர்த்தகத் துறையில் இளமாணி பட்டம்.
2. பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள I அல்லது II அல்லது III)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
II. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் உதவிக் கடை முகாமையாளர்/ உதவிக் கடை பொறுப்பாளர் (MA 1-2) பிரிவு பதவி ஒன்றின் 03 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தல்.
III. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் சிரேஷ்ட விற்பனை உதவியாளர் (MA 1-2) பிரிவு பதவி ஒன்றின் 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தல்.

**வயது** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு** : (சம்பளக் குறியீடு MA 4-2025 மற்றும் சம்பள அளவு ரூபா (64, 320/= - 10 x ரூபா 1, 360/= - 15 x ரூபா 1, 670/= 5 x ரூபா 2, 040/= - ரூபா 113, 170/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026** : அடிப்படைச் சம்பளம்: 58,598.00, வாழ்க்கைச் செலவு: 17,800.00

**நியமனத்தின் தன்மை** : EPF மற்றும் ETF இற்கான உரித்துடன் நிரந்தர அடிப்படை.

## 3. சிரேஷ்ட விற்பனை உதவியாளர் (நாடு முழுவதும்)

**பணிப் பொறுப்பு**

- விற்பனை இலக்குகள், இலாபம் மற்றும் தினசரி செயல்பாடுகள் சீராக நடைபெறுவதில் கடைத் தலைவருக்கு ஆதரவளித்து, உயர்தர வாடிக்கையாளர் சேவை தரநிலைகளை உறுதி செய்தல்.
- ஒதுக்கப்பட்ட சரக்கு பொறுப்பை ஏற்று, சரக்குகளின் சரியான பெறுதல், சேமித்தல், காட்சிப்படுத்தல், FIFO நடைமுறை, சரக்கு துல்லியம் மற்றும் விரயம், சேதம், காலாவதி ஆகியவற்றை கட்டுப்படுத்துவதை உறுதி செய்தல்.
- தினசரி பண பரிவர்த்தனை நடவடிக்கைகளில் உதவி செய்து, விலையிட ஆதரவு, பண சரிபார்ப்பு மற்றும் பாதுகாப்பான பண முகாமைத்துவம் மற்றும் வங்கி நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- சுத்தமான, ஒழுங்கான மற்றும் வாடிக்கையாளர் நட்பு கடை சூழலை பராமரித்து, வாடிக்கையாளர்களின் தேவைகளை உடனடியாக கவனித்து சேவை தரத்தை உறுதி செய்தல்.
- கனிஷ்ட ஊழியர்களின் மேற்பார்வைக்கு ஆதரவளித்து, பணி நேர ஒருங்கிணைப்பில் உதவி செய்து, ஒழுக்கம் மற்றும் நடைமுறைகளின் இணக்கத்தை உறுதி செய்து, திறமையான கடை செயல்பாடுகளுக்கு பங்களிப்பு செய்தல்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்: கீழுள்ள 1**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள I அல்லது II)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
II. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணித பாடங்கள் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் ஆரம்ப நிலை ஊழியர் பிரிவின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

**வயது** : 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு** : (சம்பள குறியீடு MA 1-2-2025 மற்றும் சம்பள அளவு ரூபா (46, 220/= - 10 x ரூபா 540/= - 7x ரூபா 630/= 12 x ரூபா 1, 080/= - 12 x ரூபா 1, 280/= - ரூபா 84, 350/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026** : அடிப்படைச் சம்பளம்: 43,312.00 மற்றும் வாழ்க்கைச் செலவு: 17,800.00

**நியமனத்தின் தன்மை** : EPF மற்றும் ETF இற்கான உரித்துடன் நிரந்தர அடிப்படை.

## 4. விற்பனை உதவியாளர் (நாடு முழுவதும்)

**பணிப் பெறுப்பு**

- தினசரி கடை செயல்பாடுகளை மேற்கொண்டு, பொருட்கள் காட்சிப்படுத்தல், மீண்டும் நிரப்புதல், சுத்தம் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட, வாடிக்கையாளர் நட்பு சூழலை பேணுதல்.
- விலைப்பட்டியல் தயாரித்தல், பணம் அறவிடல், ரசீது வழங்குதல் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப துல்லியமான மற்றும் பாதுகாப்பான பண கையாளுதலை உறுதி செய்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் தொடர்பான கேள்விகள் மற்றும் கொள்வனவுகளில் உதவி செய்து, திறமையான சேவையையும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தையும் உறுதி செய்தல்.
- FIFO முறையின் அடிப்படையில் சரக்குகளைப் பெறுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் சுழற்சி செய்வதில் உதவி செய்து, பற்றாக்குறை, சேதம் அல்லது காலாவதி நிலைகளை மேற்பார்வையாளர்களுக்கு அறிவித்தல்.
- கடை கொள்கைகள், பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களுக்கு இணங்க செயல்பட்டு, நேர்த்தி, குழுப்பணி மற்றும் ஒழுக்கத்தை பேணுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள்: கீழுள்ள 1 அல்லது 2**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தாய்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
2. ஒவ்வொரு பதவிக்கு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை தரம் 2 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**உள்ளக அபேட்சகர்கள்: கீழுள்ள I அல்லது II**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
II. வர்த்தகச் சோதனை ஒன்றில் நிருபிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 2 இற்கு குறையாத தேர்ச்சிகளுடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் வேலை அனுபவம் ஒன்றை பூர்த்தி செய்த தேர்ச்சியற்ற தரத்தில் உள்ள ஊழியர்கள்

**வயது** : 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளக் குறியீடு மற்றும் அளவு** : (சம்பளக் குறியீடு PL-2 2025 மற்றும் சம்பள அளவு ரூபா (42,300/= - 10 x ரூபா 490/= - 10x ரூபா 540/= 10 x ரூபா 590/= - 12 x ரூபா 603= - ரூபா 66, 060/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026** : அடிப்படைச் சம்பளம்: 40,008.00 மற்றும் வாழ்க்கைச் செலவு: 17,800.00

**நியமனத்தின் தன்மை** : EPF மற்றும் ETF இற்கான உரித்துடன் நிரந்தர அடிப்படை.

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றையும் பெற்றிருத்தல் வேண்டும் :**

- இதனையொத்த திறனில் (சில்லறை வியாபாரத்தில்) தொடர்புடைய துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- வலுவான தலைமைத்துவ பண்புகள் மற்றும் சிறந்த ஆளிடை / தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த தகவல் தொழில்நுட்ப திறன்களை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பல்துறை அணிகளை வழிநடத்தி, நிர்வகிக்கும் நிருபிக்கப்பட்ட திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அனைத்து விண்ணப்பதாரரும் :**

- இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் திறன்களை பெற்றிருக்கும் அபேட்சகர்கள் தொடர்புடைய கல்வி மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து தமது சுயவிபரக்கோவையை 2026 ஜூலை 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்குள் விண்ணப்பங்களை பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், லங்கா சதொச லிமிடெட், இல. 27, 4ஆவது மாடி, CWE செயலக கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**லங்கா சதொச லிமிடெட்,**
**இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**